# கழிசடையில் தலித் மக்கள் வாழ்வியல்

***முனைவர் பி. மைக்கேல் சைனி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)
பாளையங்கோட்டை

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7893

***ஆய்வுச்சுருக்கம்***

*ஒரு சமூகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள அச்சமூக மக்களின் வாழ்வியலை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஒரு குறிப்பிட்ட சமூக மக்களின் வாழ்வியல் கூறுகளைப் புரிந்து கொள்வதன் மூலம் அம்மக்களின் தனித்த பண்பாட்டைப் புரிந்து கொள்ள முடியும். இவ்வகையில் அறிவழகன் எழுதிய கழிசடை எனும் புதினத்தில் தலித் மக்களின் வாழ்வு பற்றி கூறப்பட்டுள்ளது. குறிப்பாக மலம் அள்ளும் மக்கள் மற்றும் துப்புரவுப் பணி செய்பவர் ஆகியோர்களின் வாழ்வு நிலையைத் தெளிவாக விளக்குகின்றது. அறிவழகனின் கழிசடை புதினத்தில் காணலாகும் தலித் மக்களின் வாழ்வியலை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையில் நோக்கமாகும்.*

**வாழ்வியல்**

வாழ்வியல் என்பது ஒரு தனிமனிதன் அல்லது குடும்பத்தின் அல்லது சமூகத்தின் வாழ்க்கையை முழுமையாக உள்ளடக்கியதாகும். எனவே ஒரு சமூகப்பிரிவின் பண்பாடு, சமயம், அரசியல் நடைமுறை, சடங்கு நடைமுறை முதலான அனைத்தும் வாழ்வியலுக்குள் அடங்கும். பரந்துப்பட்ட நெறிமுறைகளை உள்ளடக்கிய வாழ்வியலானது சாதிய நெறிமுறைகளை உள்ளடக்கியது.

வாழ்வியல் என்பது ஒரு மனிதனுடைய வாழ்வு இயங்கு தளத்தோடு தொடர்பு உடையது. ஒவ்வொரு மனிதனும் பிறந்தது முதல் இறப்பது வரையிலான வாழ்வியல் கூறுகள் அல்லது முறைகள் பல்வேறு தளங்களை உடையன. அவன் இயங்கும்போது தன்னைச் சுற்றிய குடும்பம் சார்ந்த இறந்த உறவுகளிலும், புறத் தொடர்களிலும், அவனோடு இணையும் பிற உறவு முறைகளிலும், அவனது சமூகத்தளம் விரிந்திருக்கிறது. இச்சமூகத்தளங்களில் ஒருவர் உருவாகும் போதெல்லாம் அல்லது இந்தச் சமூகத்தளங்களில் வாழும் போதெல்லாம் அவனது இயங்கு தளங்கள் அனைத்தும் களங்களாக அமைகின்றன.

**வாழ்வியலின் அனுபவநிலை**

வாழ்வியலின் அனுபவநிலையை பற்றி மு.கோதண்டராமன் குறிப்பிடுகையில், “புதினம் என்பது பொதுவாக மக்களுக்கு மகிழ்ச்சிக்காவே இயற்றப்படும் கற்பனைக் கதைதான்.

ஆயினும் அது உலக வாழ்க்கை ஆதாரமன்றி மனம் போன போக்கில் செல்லும் கற்பனையல்ல என்பது வெளிப்படை. அது அழகு, காதல், வீரம், தியாகம், சோகம், பயம், கவலை, பேராசை, பொறாமை, கோபம் முதலிய எல்லா மானிட உணர்ச்சிகளையும், மானிட இயல்புகளின் போராட்டங்களையும் தழுவியிருக்கின்றது. புதின இலக்கியப் படைப்பாளி வாழ்க்கையின் உண்மைகளில் இருந்தே கதைக்கான கருவை அமைத்துக் கொள்கிறான். அவற்றை, அவன் நம் கண்முன் நடப்பன போன்று சித்தரித்துக் காட்டுகின்றான். அவன் தான் நேருக்கு நேராகக் கண்டறிந்த நிகழ்வுகள், மற்றவர் கண்டறிந்தவை ஆகியவைகளையெல்லாம் வைத்துக் கொண்டே கதை எழுதுகிறான்' என்று கூறுகின்றார். இவ்வகையில் அறிவழகனும் தம் சொந்த வாழ்வின் அனுபவங்களையே தம் படைப்பில் பிரதிபலிக்கும் விதமாகப் படைத்துள்ளார்.

### தலித் மக்கள் வாழ்வியல்

தலித் மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள்தான் தலித் வாழ்வியலாகக் கருதப்படுகின்றது. இயற்கையான புவியின் அமைப்பு வாழ்க்கை மாற்றத்தையும் வேறுபாட்டையும் நிர்ணயம் செய்கின்றது. சமூகம் உயர்சாதி, கீழ்ச்சாதி என்று இருவகைப் பாகுபாடுகளைக் கொண்டிருக்கின்றது. இதில் உயர்சாதியினர், தலித் மக்களுக்கான வாழ்வியலைத் தீர்மானிக்கின்றனர். தலித் மக்கள் உயர்சாதியின் நாகரிகம் இல்லாதவை என்று ஒதுக்கியவற்றை, தங்கள் வாழ்வின் மூலதனமாகக் கொண்டு வாழ்கின்றனர். தலித் மக்களின் வாழ்வியல் வேதனையானதும், அருவருக்கத்தக்கதும், துன்பங்கள் நிறைந்ததுமாகக் காணப்படுகின்றது.

### லித் மக்கள் வாழ்வியல் கூறுகள்

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள ஒவ்வொரு நிகழ்வுகளும் வாழ்வியல் கூறுகள் ஆகும். பிறப்பு, உணவு, உடை, இருப்பிடம், மூடநம்பிக்கை, விளையாட்டு, கலை, அரசியல், திரைப்படம், தொழில், திருமணம், காதல், குடும்பம், கல்வி, சமய நம்பிக்கை, பொழுதுபோக்கு, சாதி, உறவுமுறை, புப்புச் சடங்கு, இறப்பு முதலியவை வாழ்வியல் கூறுகளாகும். பொதுவாகவே, இந்துப் பார்ப்பணர் சமூக அமைப்புக்கு எதிராக உருவான தலித் மக்களின் வாழ்வியல் முறை என்பது பண்பாட்டு அடிப்படையில் மேற்சமூக அமைப்பிற்கு எதிராக இயங்கி வருவதைக் காணலாம். உணவு, உடை, இருப்பிடம், வாழ்நிலை, கல்வி, பொருளாதாரம் போன்ற காரணிகளோடு தலித் மக்களின் வாழ்வும் பண்பாடும் இரண்டறக் கலந்துள்ளன. "அறிவழகனின் கழிசடை" புதினத்தில் தலித் மக்களின் வாழ்வுநிலை அவலம் பொருந்தியதாக விளங்குவதை அறிய முடிகின்றது.

### இருப்பிடம்

தலித் மக்கள் வாழும் இடங்களில் இன்றளவும் அதிகமான பாகுபாடுகள் காணப்படுகின்றன. அறிவழகனின் புதினத்தில் இவை தென்படுகின்றன. தலித் மக்கள் குறிப்பாக கழிசடை புதினத்தில் சுட்டப்படும் துப்பரவுப் பணியாளர்கள், அருந்ததியர்கள், மலம் அள்ளும் மக்கள், சுடுகாட்டில் பணிபுரிபவர்கள் ஆகியோர்களின் இருப்பிடம் என்பது ஊரின் ஒதுக்குப்புறத்தில் தான் இருக்கின்றது.

வாழும் இருப்பிடங்களிலும் தலித் மக்கள் ஒடுக்கப்படும் நிலையை, அவர்கள் வாழும் இருப்பிடத்தைக் கொண்டு அறிய முடிகின்றது. பெரும்பாலும் இவர்களின் வீடுகள் அனைத்தும் குடிசைகளாகத் தான் இருக்கின்றது. கழிசடை புதினத்தில், அனுமந்தப்பாவின் தந்தை முனியன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகத்தான் குடிசை அமைத்து வாழ்ந்த நிலையினைச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தலித் மக்கள் தாங்கள் வாழும் இருப்பிடங்களிலும் ஒடுக்கப்படும்

முறைகளிலிருந்து மீள்வதற்கு அன்பு செல்வன் என்பவர், "பெரும்பான்மை ஆதிக்கச் சாதிகளின் மத்தியில் அடிமைப்பட்டுக் கிடக்கின்ற தலித் மக்கள், தங்களின் மண்ணுரிமையும், பண்பாட்டு அடையாளத்தையும் பாதுகாத்துக் கொள்ளவும், தலித் மக்கள் வாழ்வாதரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும், தலித் மக்கள் அதிகமாக குடியிருக்கின்ற பகுதிகளில் அல்லது வேறொரு தனி இடத்தில் குடியேறுவதன் இப்போதைய உடனடித் தீர்வாக இருக்க முடியும்.' என்று சிறந்ததொரு தீர்வினைக் கூறுகின்றார்.

**தொழில்**

தொழில் பற்றி சு.சக்திவேல் என்பவர் "இயற்கையில் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் செயலே பழங்காலத்தில் தொழில் எனக் கருதப்பட்டது. இன்று தொழிலே உலகத்தை இயக்கும் சக்தியாக வளர்ந்துள்ளது.' என்று குறிப்பிடுகின்றார். பாரம்பரிய இந்திய சமூகத்தில் நான்கு வருணக் கோட்பாட்டின்படி தொழில் பிரிவினை ஏற்படுத்தப்பட்டுள்ளது. சாதியப் படிநிலை முறையானது, உயர்சாதி இந்துக்களை விரும்பிய தொழிலுக்கு மாறிச் செல்லுவதைத் தடுக்கவில்லை. ஆனால் கீழ்ச்சாதி, தீண்டத்தகாத சமுதாயங்களைச் சேர்ந்தவர்களான தலித் எங்கள் மக்கள் செய்து வந்த தொழில்களாகிய, தோலைச் சுத்தம் செய்தல், செத்த மாட்டை அகற்றுதல், கையால் மலம் அள்ளுதல், துப்புரவுப் பணி செய்தல், இழவுச் செய்தி சொல்லுதல், பிணம் எரித்தல், செருப்பு தைத்தல் மற்றும் உயர்சாதியினரால் தீட்டு என்று கருதப்படும் தொழில்கள் அனைத்திலும் தொடர்ந்து ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். கழிசடைப் புதினத்தில் அனுமந்தய்யா என்பவருக்கு, இழிதொழில் எனக் கருதப்படும் மலம் அள்ளுதல், துப்புரவுப்பணி ஆகியவைத் தொழிலாக இருந்தன. சுடலை என்பவருக்குச் சுடுகாட்டில் பிணம் எரிக்கும் தொழிலைச் செய்து வந்தார். இவ்வாறு சமுதாயத்தில் தீண்டத்தகாத இழிதொழில் என்று நினைக்கும் அனைத்தும் கீழ்ச்சாதியான தாழ்த்தப்பட்ட தலித் மக்களுக்கு உரியது என்பதை இப்புதினத்தின் வழி உணர்ந்து கொள்ள முடிகிறது.

**நம்பிக்கை**

இயற்கையால் படைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கும் மனிதனின் செயல்களுக்கும் தொடர்புண்டு என்ற கருத்தின் அடிப்படையில் நம்பிக்கைகள் தோன்றின எனலாம். காந்தியின் நம்பிக்கை கருத்துக்களை எழுத்தாளர் நாசீர் என்பவர், "இயற்கையின் புதிரான செயல்களை அறிவு கொண்டு உணர இயலாத போதும், மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அந்நிலையில் அவை நம்பிக்கைகளாக உருப்பெற்று அவ்வக்கால இலக்கியங்களில் சமுதாயச் செல்வாக்குக் காரணமாக இடம்பெற்று வருகின்றன.' என்று கூறுகின்றார். எனவே நம்பிக்கை என்பது தனக்கு நம்பிக்கையும் அகமும் பாதுகாப்பும் நித்திய உணர்வும் தரக்கூடிய ஏதோ ஒன்றில் ஈடுபட்டுள்ள ஒரு மனத்தின் தன்மையாகும் என்பதை அறிய முடிகின்றது. ஆறிவழகனின் கழிசடை புதினத்திலும் நம்பிக்கை குறித்த செயல்பாடுகள் மக்களிடம் இருப்பதைக் காணமுடிகிறது.

**குடும்ப உறவுகள்**

சமூகத்தின் மிகச்சிறிய குழுவாக, "குடும்பம்" என்ற அமைப்பு உள்ளது. குடும்பம் என்பது ஆண், பெண் சேர்க்கை உறவைக் கொண்டது. இது மனிதனிடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைப் பிரித்துக் காட்டுகின்றது. இதனை இரா.கற்பகம் என்பார், "குடும்பம் என்பது ஒரு மிகச்சிறிய குழு அது ஆண், பெண் சேர்க்கை உறவைக் கொண்டது. மனிதனிடையே உள்ள ஒற்றுமை,

வேற்றுமைகளைப் பிரித்துக் காட்டுகின்றது. ஒற்றுமையில்லையேல் சேர்ந்து வாழும் மனப்பான்மை இருக்காது.' என்று குறிப்பிடுகின்றார். தலித் மக்களிடம் குடும்ப உறவுகள் சீரிய முறையில் அமைந்திருப்பது அறிதாகக் காணப்படுகின்றது. காரணம் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் ஆகும். நிலையான வருமானமும் நிரந்தர பணியும் தலித் மக்களுக்கு என்று கிடையாது. இதை கழிசடை புதினத்தில் அனுமந்தய்யாவின் குடும்ப வாழ்க்கையில் காண முடிகின்றது. நு¦லையான வருமானம் இல்லாததால், அனுமந்தய்யா வீட்டிற்கு வரும் போதெல்லாம் மது அருந்தி விட்டு தன் மனைவி கொண்டம்மாளை அடித்துச் சண்டைப் போட்டு வீட்டை விட்டு வெளியே துரத்தி விடுகிறார். இதற்கு காரணம் சரியான புரிதல் இன்மைதான் ஆகும். இவ்வாறு குடும்ப உறவுகள் புரிதல் இன்மையாலும், பொருளாதார இன்மையாலும் பிளவுப்பட்டு போகும் நிலையினைக் கழிசடை புதினத்தில் காணமுடிகிறது.

### உணவு

தலித் மக்கள் அன்றாடம் புதிய உணவு அருந்துவதில்லை. முாறாக வீடு வீடாக சென்று இரவல் வாங்கி உண்ணும் வழக்கம் இருந்தது என்பதை கழிசடை புதினம் சுட்டிக் காட்டுகின்றது. அனுமந்தய்யாவின் தந்தை முனியன் என்பவர் ஊரில் வீடு வீடாக சென்று இரவல் வாங்கி அந்த உணவினைக் கொண்டு தன்னுடைய குடும்பத்தின் பசியைப் போக்கிக் கொள்ளும் சூழ்நிலை காணப்படுகின்றது. மேலும் தலித் மக்களின் உணவு என்பது பழையக் கஞ்சி, செத்த மாட்டின் இறைச்சி, கெட்டுப்போன உணவுகள் ஆகிய உணவுப் பொருள்களே இவர்களின் அன்றாட உணவாக இருக்கின்றது. இவ்வகையாக தலித் மக்களின் உணவு முறைகள் அமைகின்றன.

### முடிவுரை

துப்புரவுத் தொழிலாளர்கள் சுரண்டப் படுவதையும் ஒடுக்கப்படுவதையும் பற்றித் தான் இப்புதினம் பேசுகிறது. ஆனால் அடக்குமுறைக்கு எதிரான எழுச்சியையும் தேவையையும் கழிசடைப் புதினமானது முன்னிருத்தவில்லை. மக்கள் மலம் கழித்தால் உடல் தூய்மையாகிவிடும் எனக் கருதுகிறார்கள். நாம் வாழும் சமுதாயத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். குறைந்த பட்சம் தூய்மைப் பணியினைச் செய்யும் மனிதர்களையாவது மதிக்கும் எண்ணம் ஒவ்வொருவருக்கும் வர வேண்டும்.